Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 107 | செவ்வாய்க்கிழமை Tuesday | 17.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ரூ.542 கோடி செலவில் பல்வேறு கல்விசார் கட்டடங்கள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை: உயர்கல்வித் துறை சார்பில் ரூ.542.02 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளகல்விசார்கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.555.92 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல்விசார் கட்டடங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (16.02.2026) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில். அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 542.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை கட்டடங்கள். மகளிர் விடுதிக் கட்டடம், திறன்மிகு மையங்கள் போன்ற பல்வேறு கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில அரசு பொறியியல் கல்லூரிகள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்,பல்நோக்குஅரங்குகள். விடுதிகள் மற்றும் இதர கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில். அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி,புதுமைப்படைப்புகள்.

தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்ததிறன்மிகுஇளைஞர்களை உருவாக்குதல். அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம்வகுப்புவரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/- உதவித் தொகை வழங்குதல், அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் இடஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள். கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் ஒரு புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி; இராணிப்பேட்டைமாவட்டம் மேல்வெங்கடாபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், சென்னை மாவட்டம் திருவொற்றியூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 42 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்கள்;தருமபுரி மாவட்டம் செட்டிக்கரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்துவாக்குடி,சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, தேனி மாவட்டம் - வீரபாண்டி, மதுரை மாவட்டம் செக்கானூரணி, கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் தென்னாங்கூர், செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கல்லூரிகளில்45கோடியே27இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 34 வகுப்பறைகள் 19 ஆய்வகங்கள், பணிமனை,மகளிர் விடுதி மற்றும் இதர கட்டடங்கள்; சென்னை,கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஐந்து அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் 255 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 திறன்மிகு மையங்கள்: அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக, 198.84 கோடி ரூபாய் செலவில் கற்றல் மேலாண்மை அமைப்புடன் ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருள்;

என மொத்தம் 542.02 கோடி ரூபாய் செலவிலான உயர்கல்வித் துறை சார்ந்த 15 கட்டடங்களை திறந்து வைத்து, ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருளை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்தார். அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள் கரூர்மாவட்டம்அரவக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், ஈரோடு மாவட்டம் அந்தியூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம்- நத்தம், திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம், தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 180 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்:

தென்காசி மாவட்டம் தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, செங்கிபட்டி, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, கடலூர் மாவட்டம் - சிதம்பரம், திட்டக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம், ஈரோடு மாவட்டம் திட்டமலை, ஈரோடு, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், கன்னியாகுமரி, கடையநல்லூர், விருதுநகர் மாவட்டம் சிவகாசி, திண்டுக்கல் மாவட்டம்நிலக்கோட்டை, சென்னை நந்தனம், மாநிலக் கல்லூரி, தரமணி, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி,நீலகிரி மாவட்டம் உதகமண்டலம்,செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கம், குரோம்பேட்டை, நாமக்கல் மாவட்டம் இராசிபுரம், நாமக்கல்,தர்மபுரி மாவட்டம் அரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி, சேதுராபட்டி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி,தேனி மாவட்டம் போடிநாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் மாவட்டம் ஜோலார்பேட்டை, அரியலூர் மாவட்டம் பர்கூர், திருப்பத்தூர் கீழப்பழூவூர், அரியலூர், மயிலாடுதுறை சேலம் கரூர் - வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு கல்லூரிகளில் 375 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 437 வகுப்பறைகள், 19 பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்கள்; எனமொத்தம்555.92கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உயர்கல்வித்துறை கட்டடங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

# "மீனவர்கள் பிரச்சனையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை"

## த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம்



சென்னை: "மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா?" எனதவெகதலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "புதுச்சேரியின் காரைக்கால் மாவட்டம், காசாக்குடிமேடு, கிளிஞ்சல்மேடு கிராமங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக்கூறிஇலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.அத்துடன், அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

இந்த அடாத செயல், அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் 25 பேரையும் உடனடியாக விடுவித்து, அவர்களது படகுகளையும் மீட்டுத் தர ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில், இலங்கை நீதிமன்றத்தால் கடந்த 3-ம் தேதி விடுவிக்கப்பட்ட பிறகும் தமிழ்நாட்டு மீனவர்கள் 9 பேர், சொந்த ஊருக்குத் திரும்ப முடியவில்லை. அவர்கள் அங்கே பரிதவித்து வருவதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளது வேதனை அளிக்கிறது. மேலும் தமிழக மீனவர்கள் 3 பேர், இலங்கை நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையைச் செலுத்த முடியாமல் சிறையில் வாடுகின்றனர்.

மீனவர்களுக்குத் தொடர்ந்து இதுபோல நிகழ்வதைத் தடுக்க, தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை.தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா? இது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் அனைவரையும் உரிய முறையில் மீட்டு,சொந்த ஊருக்கு அழைத்து வர வேண்டும்.

மனிதாபிமான முறையில் இலங்கை அரசிடம் பேசி, தாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், ஒன்றிய அரசைஉண்மையாகவே உணர்வுப்பூர்வமாக வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

# புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: தமிழகத்தில் பிப்.21ல் 10 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை: தென்மேற்கு வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக வரும் பிப்ரவரி 21-ம் தேதி டெல்டா உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிவுள்ளது.

இது வடமேற்கு திசையில்நகர்ந்துதென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப்பெருங்கடலின் கிழக்கு பகுதிகளில் 18-ம் தேதி வாக்கில் மேலும் வலுப்பெறக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளையும் (பிப்.17),நாளை மறுதினமும் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

19-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 20 முதல் 22-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கனமழை வாய்ப்பு: 21-ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களிலும்,22-ம் தேதி தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.அதிகாலைவேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் 19,20 தேதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்களின் கல்வெட்டுகள் திறப்பு

### அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியம் பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்களின் கல்வெட்டுகள் பெரும்பேர் கண்டிகை அரசு பள்ளி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் கல்வெட்டுகளை குறு சிறு மற்றும் நடுத்தரதொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு, திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை ஸ்ரீதேவி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் டிவி, கோகுலகண்ணன், ஜிதம்பு,வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் சீனுவாசன். ஜெயக்குமார். ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் சிவகுமார், இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் கலியுக கண்ணதாசன், மாவட்ட கவுன்சிலர்கள் வசந்தா, மாலதி, ஒன்றிய கவுன்சிலர் பார்த்தசாரதி, பெரும்பேர் கண்டிகை ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர், உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

## கற்றல் வசதியுடன் கல்வி திட்டம் கிராமங்கள் தோறும் அரசுப்பள்ளிகளுக்கு இலவச பெஞ்சுகள்

### சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளை சாதனை



செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக கற்றல் வசதியுடன் கல்வி என்னும் திட்டத்தை 2025 ஜூலை மாதம் சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளை அறிமுகப்படுத்தி கிராமங்களில் செயல்படும் அரசுத் தொடக்கப்பள்ளி மற்றும் அரசு நடுநிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு வகுப்பறையில் உட்காருவதற்கு பெஞ்சுகளும் எழுதுவதற்கு மேசைகளும் வழங்கிவருகிறது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான கிராமப்புற அரசுப் பள்ளிகளில், போதுமான இருக்கைகள் மேசைகள் இல்லாததால், மாணவர்கள் வகுப்பறைகளில் தரையில் அமர்ந்து படிக்க வேண்டியுள்ளது. நீண்ட நேரம் தரையில் அமர்ந்திருப்பது, முதுகெலும்பு வட்டுகளின் மீது அழுத்தத்தை அதிகரிக்கிறது. காலப்போக்கில் நாள்பட்ட முதுகுவலி மற்றும் முதுகெலும்பு குறைபாடுகள் போன்ற நிலைகளுக்கு வழிவகுக்கும். இவ்வாறு குறுகி அமர்ந்து செயல்படுவது நுரையீரல் கொள்ளளவைக் குறைக்கவும் செய்கிறது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வகுப்பறைகளில்மாணவர்களின் கற்றல் வசதியை மேம்படுத்த மிகச்சரியான இருக்கை வசதிகளை வழங்குவதன்மூலம் மாணவர்களின் உடல்நலனுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தவும் இயலும்என்பதனால்'கற்றல் வசதியுடன் கல்வி' திட்டத்தை சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் கவிஞர் விஜயகிருஷ்ணன் தொடங்கி செயல்படுத்தி வருகிறார்.

சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசர் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குனருமான கவிஞர் விஜயகிருஷ்ணன் தெரிவித்தார். மேலும் இந்த திட்டத்தின் பணிகளைமாநிலம்முழுவதும் கொண்டு சேர்ப்பதற்கான தன்னார்வலர் குழுக்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார். என்பது குறிப்பிடத்த க்கது.

இருக்கை மற்றும் எழுது மேசைகளை அச்சிறுப்பாக்கம் வட்டம் வடமணிப்பாக்கம் அரசு தொடக்கப்பள்ளிக்கு வழங்கும் விழாவிற்கு அச்சிறுப்பாக்கம் ஒன்றியப் பெருந்தலைவர் ஒரத்தி கே.கண்ணன் தலைமை தாங்கினார். பள்ளித் தலைமை ஆசிரியர் சோமசுந்தரி, கவுன்சிலர் பாலசுப்ரமணியன், வடமணிப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயந்தி வடிவேல்,சிறுதாமூர் ஊராட்சி தலைவர் செல்லப்பன், துணைதலைவர் முத்து விஜி, செனயனேரி வார்டு உறுப்பினர் அன்பரசு, ரங்கப்பன் உள்ளிட்ட பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

## விசிக நிர்வாகி இல்ல விழா அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் வாழ்த்து



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட மகளிர் விடுதலை இயக்கத்தின் மாவட்ட நிர்வாகி எலப்பாக்கம் அமலிதெரேஸ் ஜெயபால். இவர்களின் மகன்கள் ஜெ.அ, யுவான் பிளாவியஸ் நாயக் , ரோஜர் பிளாவியஸ் நாயக் , இவர்களுக்கு சமத்துவ காதணி விழா தமிழர் பண்பாட்டு முறையில் இவ்விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் பரந்தாமன்,நேசமணி, குமார் ,ரஞ்சித்குமார், விக்டர் ,சந்தோஷ், வெங்கடேசன், தமிழ்ச்செல்வன், செல்வம்,சதிஷ். பாக்யராஜ், உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள்என பலர் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்திச் சென்றனர்



## தமிழ்நாடு ஊடகமக்கள் சங்கம் 2ஆவது எழுச்சி மாநில மாநாடு சிறப்பாக நடைபெற்றது

தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கத்தின் பத்திரிகையாளர்களின் உரிமை மீட்பு 2ஆவது எழுச்சி மாநிலமாநாடு 15.02.2026 அன்று மாலை உற்சாகமான சூழலில் சிறப்பாக நடைபெற்றது.மாநாட்டிற்கு மாநில தலைவர் K. புருஷோத்தமன் தலைமையேற்று நிகழ்ச்சியை தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மதிவேந்தன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கலந்து கொண்டு பத்திரிகையாளர்களின் உரிமைகள் மற்றும் ஊடக வளர்ச்சி குறித்து சிறப்புரையாற்றினார்.மேலும் மாநில துணைத் தலைவர் M. நாராயணராஜா, மாநில இளைஞர் அணி நிர்வாகி திரு. K. தங்கபாண்டியன், சட்ட ஆலோசகர் Dr. P. சிவக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர். பத்திரிகையாளர்களின் உரிமைகள், சமூகப் பொறுப்பு மற்றும் சங்கத்தின் எதிர்கால பணிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. நிகழ்ச்சியின் போது தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன், சங்க உறுப்பினர்களுக்கு பதக்கம்,கேடயம்மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஏராளமான பத்திரிகையாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தனர்.சேலம் மாவட்டம் ஓமலூரில் நடைபெற்ற இந்த மாநில மாநாட்டில் சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் சார்பில் சிவகங்கை மாவட்டத் தலைவர் சேகர், மாவட்டச் செயலாளர் ராஜசேகர், முத்துராஜன் காதர் பாட்ஷா மற்றும் ஜெயகார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.



100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தினை முடக்க நினைக்கும் மத்திய பாஜக அரசை கண்டித்து சட்டமன்ற உறுப்பினர் ராஜேஷ்குமார் கிள்ளியூர் சட்டமன்றத்துக்குட்ப்பட்ட அடைக்காகுழி மற்றும் குளப்புறம் ஊராட்சி பகுதிகளில் மக்களை சந்திக்கும் நடைபயணம் கட்சி நிர்வாகிகளோடு மேற்கொண்டதில் மகிளா காங்கிரஸ் மேற்கு மாவட்ட தலைவர் GPலைலாரவிசந்திரன் கலந்து கொண்டார்.

## “கூட்டணி குறித்து கட்சியினர் பொதுவெளியில் பேசக்கூடாது” செல்வப்பெருந்தகை கண்டிப்பு



சென்னை:

"கூட்டணி குறித்து யாரும் பொதுவெளியில் பேசக்கூடாது எனராகுல் காந்தி அறிவுறுத்தியுள்ளார்" என மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களை செல்வப்பெருந்தகை கண்டித்துள்ளார்.

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில், 'அதிகார பகிர்வு அவசியம். ஆட்சி பங்கு எங்கள் உரிமை' என காங்கிரஸ் மூத்த தலைவர் மாணிக்கம் தாகூர் கூறியிருந்தார். அதேபோல் காங்கிரஸின் பிரவீன் சக்கரவர்த்தியும் திமுகவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கிறார். இந்த எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுத்துவரும் நிலையில், செல்வப்பெருந்தகை இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மதுரை காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து எனக்குத் தெரியாது. கூட்டணி பற்றி யாரும் பொதுவெளியில் பேசக் கூடாது என ராகுல் காந்தி, கார்கே மற்றும் வேணுகோபால் ஆகியோர் தெரிவித்துள்ளனர். அவர்களை விட யாரும் பெரியவர்கள் இருக்கிறார்களா என எனக்கு தெரியவில்லை. அகில இந்திய காங்கிரஸ் காட்டும் வழியில் செயல்படுபவன்தான் இந்த செல்வப்பெருந்தகை. இத்தனை காலம் பேசாமல் தேர்தல் நேரத்தில் இந்தகருத்தை பேசுவது ஏன்?,

இப்படி பேசுவதை தவிரக்க வேண்டும். நான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை மதிப்பவன்; அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த அரசியல் பயணத்தை தொடர்கிறோம்.

எங்களுக்கு என்ன தேவை என்பதை தாயும், தந்தையுமாக இருக்கின்ற காங்கிரஸ் தலைமையிடம் கூறுவோம். அவர்கள் எங்களுக்கு வழி காட்டுவார்கள். எனக்கு பேச தெரியும், நான் என்ன வேண்டுமானாலும் பேசுவேன் எனக்கூறுவதற்குஎதற்கு கூட்டணி, அது என்ன முறை, அது என்ன ஜனநாயகம்?. ஜனநாயகத்துக்கு முரணாக, அகில இந்திய காங்கிரஸுக்கு முரணாக யார் நடந்துகொண்டாலும் அது தவறுதான். இது குறித்து இன்று டெல்லியில் ஆலோசனை செய்யப்படும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நாகர்கோவில் மாநகராட்சி 3வது வார்டில் குடிநீர் விநியோகம் தாமதம் வேலைக்கு செல்லும் பெண்கள் அவதி



நாகர்கோவில் மாநகராட்சி 3-வது வார்டு பகுதிகளில் வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்ந்து தாமதமாக திறக்கப்படுவதால் பொதுமக்கள், குறிப்பாக வேலைக்கு செல்லும் பெண்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். முன்னதாக காலை 6.00 மணிக்கு திறக்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம்தற்போது காலை 7.30 மணிக்கே தொடங்கப்படுகிறது. மேலும் காலை 9.30 மணிக்கே நிறுத்தப்படுவதால் குடிநீர் சேகரிக்க பொதுமக்கள் அவசரப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காலை நேரத்தில் அலுவலகம், தொழிற்சாலை உள்ளிட்ட பணிகளுக்கு செல்ல வேண்டிய பெண்கள் தங்கள்வீட்டுவேலைகளையும்,குடிநீர்சேகரிப்பையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டியதால் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் இந்த தாமதம் ஆபரேட்டரின் பணி பொறுப்பின்மை காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

உடனடி நடவடிக்கை எடுத்து முன்புபோல் நேரத்திற்கு குடிநீர் வழங்க மாநகராட்சி அதிகாரிகள் முன்வர வேண்டுமென மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இரண்டு தினங்களுக்கு ஒரு முறை வரும் தண்ணீரையும்குறிப்பிட்ட நேரத்திற்குவழங்காமலும் சீக்கிரமாகவே நிறுத்தி செல்லும் ஆப்பரேட்டரை கண்டுகொள்ளாத மாநகராட்சி அதிகாரிகள் மீது பொதுமக்கள் அதிருப்தி.

## கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய வீட்டுக்கடன், மற்றும் அபராத வட்டியினை ஏழை எளிய மக்களுக்கு தள்ளுபடி செய்ய வேண்டும்

### கோவை மாவட்ட ஆட்சியரிடம் அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பில் சார்பாக மனு அளிக்கபட்டது.



கோவை சிவாஜி காலனி பகுதியில் அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை செய ல்பட்டு வரு கின்றது. இந்த அமைப்பின் தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகிறார் இவர், கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமாரை சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை வழங்கினார்.இந்தமனுவில்,கடந்த15வருடங்களுக்கு மேலாக, இலவச சட்ட ஆலோசனைகளை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றதாகவும், கோவை மாவட்டத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கோவை மாவட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் பொதுமக்கள் வீடுகள் கட்ட, கடன் பெற்றுள்ளனர் அவ்வாறு பெற்றுள்ள கடனை திரும்ப செலுத்த முடியாமல் தவித்து வருகின்றனர் அவ்வாறு கஷ்ட படுகின்ற ஏழை எளிய மக்கள் வாங்கிய கடன்களை தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இத்தகைய கடன்தள்ளுபடி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்றார். எனவே தமிழக அரசு, மத்திய கூட்டுறவு சங்கம் மற்றும் கோவை மாவட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில், வாங்கியுள்ள வீட்டு கடன்களை தள்ளுபடிசெய்யவேண்டும்என்றுமனுஅளித்துள்ளதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



நாகர்கோவில் WCCகல்லூரியில் இருந்து மணிமேடை செல்லும் சாலையில் நீதிமன்றம் திரும்பும் சாலை பகுதியில் பள்ளத்தில் சிக்கிய சொகுசு கார். பல நாட்களாக அங்கு பணிகள் முடிவடையாமல் இருப்பதால் அடிக்கடி வாகனங்கள் விழுந்து விபத்து. மேலும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு.



அமைச்சர் மூர்த்தி, கலெக்டர் பிரவீன் குமார் தலைமையில் மதுரை மாவட்டம், கூட்டுறவுத் துறை சார்பில் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பழங்காநத்தம் கிளையில் தனிநபர் பாதுகாப்பு பெட்டக பிரத்யேக சேவை வசதியினையும் மற்றும் இந்த வங்கியின் 47 வது புதிய கிளையாக செக்காணூரணியில் பொது மக்கள் விவசாயிகள், வணிகர்கள்பயன்பாட்டிற்குகுத்துவிளக்கேற்றிதிறந்துவைத்து7சுயஉதவிக்குழுக்களுக்கு 1.09 கோடி மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார். மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களை உள்ளடக்கி 46 கிளைகளுடன் கடந்த 113 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

### வரும் சட்டப்பேரவை தேர்தலில் தூத்துக்குடி மாவட்டத்தில்

# எந்தவித அரசியல் வேறுபாடின்றி காவல்துறையினர் பணியாற்றுவார்கள்

## காவல் கண்காணிப்பாளராக பொறுப்பேற்ற டாக்டர். சி. மதன் தகவல்



தூத்துக்குடி மாவட்டத்தில் 35வது காவல் கண்காணிப்பாளராக இன்று பொறுப்பேற்றுக்கொண்ட டாக்டர். மதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்: தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீரமைப்பு தான் அடிப்படையான காவல் பணியாக இருக்கும். மேலும் குற்றங்கள் தடுப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

சாலை விபத்துகளை தடுப்பதில் சாலை போக்குவரத்தை முழுமையாக அமல்படுத்துவதில் அதிக கூடுதல் கவனம் செலுத்தப்படும் போக்குவரத்து விதிமுறைகளை தனி மனிதனாக ஒவ்வொரு முழுமையாக கடைபிடிக்க வேண்டும்.

கொலை, கொள்ளைகளை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். வரும் தேர்தலில் சட்டசபை பேரவை தேர்தலில் காவல்துறையின் பங்கு முக்கிய பங்கு இருக்கும். தேர்தலைப் பொறுத்தவரை தூத்துக்குடி மாவட்டத்தில் எந்தவித அரசியல் வேறுபாடின்றி காவல்துறையினர்பணியாற்றுவார்கள் மேலும், கடலோர மாவட்டமான தூத்துக்குடியில் கடல் வழி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்படும் என்றும், கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களைத் தடுக்கும் வகையில் கண்காணிப்பு அதிகரிக்கப்படும்

சாலை விபத்துகளை குறைப்பதற்காக சிறப்பு கவனம் செலுத்தப்படும் எனவும், பொதுமக்கள் போக்குவரத்து விதிகளை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். "சாலை பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு. ஹெல்மெட், சீட் பெல்ட் உள்ளிட்ட விதிகளைமீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் ஜாதி அடிப்படையிலான பிரச்சினைகள் தொடர்பாக காவல் துறைக்கு தனிப்பட்ட கண்காணிப்பு குழு செயல்பட்டு வருவதாகவும், அவை ஏற்படாமல் தடுக்கும் வகையில் புதிய யுக்திகள் மற்றும் திட்டங்கள் வகுக்கப்படும் என்று தெரிவித்தார்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம், சிக்கைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நேற்று (16.02.2026) அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் புதிய பேருந்துகளின் இயக்கத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, பொது மேலாளர் (பொ) (தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், ஈரோடு மண்டலம்) செல்வக்குமார், கல்லூரி முதல்வர் திருகுமரன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டத்தில் புகழ்பெற்ற கோட்டை அருள்மிகு ஸ்ரீ ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மகாசிவராத்திரி விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு நான்கு கால பூஜைகளிலும், சிவபெருமானுக்குச் சிறப்பு அபிஷேகங்களும் நடைபெற்றன. விடிய விடிய பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று "ஓம் நமச்சிவாய" கோஷத்துடன் சுவாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவில்கலந்து கொண்டபக்தர்கள்அனைவருக்கும்அன்னதானம்வழங்கப்பட்டது.



## கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த சாலமரத்துப்பட்டி ஓலப்பட்டி கிராமத்தில் சென்ராய சுவாமி ஆலயத்தில் மகாசிவராத்திரி தேர் திருவிழா

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த சாலமரத்துப்பட்டி ,ஓலப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள சென்ராய சுவாமி ஆலயத்தில் மகாசிவராத்திரி தேர் திருவிழா நடைபெற்றது.

இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் மகா சிவராத்திரி இரவு மற்றும் பகல் நேரங்களிலும் திருவிழா வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம்

இக்கோவில் சென்றாய பெருமால்பூதேவி,சீதேவி சமேத சென்றாயப் பெருமாள் கோவில் மலை மீது அமைந்துள்ளது. இக்கோவிலுக்கு சிவராத்திரி அன்று இரவு சிறப்பு அலங்காரம் செய்து பூஜைகள் நடைபெற்றன மறுநாள் காலையில் பகல் தேர் நடைபெறுவது வழக்கம் போச்சம்பள்ளி மற்றும் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரை இழுத்துச் சென்றனர்.

தேர்மலையை சுற்றி வரும் பொழுது பக்தர்கள்விவசாயநிலங்களில் விளைந்த அவரை துவரை ஆமணக்கு ஆகிய வற்றை தேரின் மீது வீசி அடுத்த ஆண்டும் குறைவில்லா மகசூல் பெற்று விவசாயம் செழித்திட பக்தர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தேர் வெள்ளோட்டத்திற்கு ஊத்தங்கரை உட்கோட்டை கல்லாவி காவல்துறையினர் சிறப்பான பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

ஸ்ரீதேவி பூதேவி சமேத சென்றாய பெருமாள், மலர் மாலை அலங்காரத்தில்பக்தர்களுக்குஅருள் பாலித்தார். தேரோட்டத்திற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் செய் திருந்தனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள செய்தியாளர் அறையில் அதிவேக இணையதள வசதியினை துவக்கி வைத்தார்



ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள செய்தியாளர் அறையில் அதிவேக இணையதள வசதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.02.2026) துவக்கி வைத்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களின் 2025-2026 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் அச்சு மற்றும்காட்சி ஊடகசெய்தியாளர்கள் உடனுக்குடன் செய்திகளை விரைந்து அனுப்பிட ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும்நவீன கட்டமைப்புடன் கூடிய கணினி மற்றும் அதிவேக இணையதள வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, நேற்றைய தினம், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள செய்தியாளர்கள் அறையில் கணினி மற்றும் அதிவேக இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) செ.கலைமாமணி, மற்றும் செய்தியாளர்கள், பத்திரிக்கையாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், புகைப்படக்காரர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாநகர் கோட்டை அருள்மிகு ஆருத்ரா கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மகாசிவராத்திரிதிருவிழாசிறப்பாககொண்டாடப்பட்டது.இவ்விழாவில்கலந்துகொண்ட பக்தர்களுக்கு சக்கரைவள்ளி கிழங்குகளை கோட்டை விஜய பாஸ்கர் ஏற்பாட்டில் அறங்காவலர் குழு தலைவர் எஸ்.எஸ்.டி கர்சிப் சுப்பிரமணியம், இ.பி.ரவி, அறங்காவலர் குழுஉறுப்பினர்கள்சுந்தர்ராஜ், ராவணன், திமுகபிரதிநிதி ரமேஷ், பாலமுருகன்ஆகியோர் வழங்கினார்கள்.



நாகர்கோவில் செட்டிகுளம் சந்திப்பில் இருந்து கோட்டார் செல்லும் சாலையில் கடுமையான போக்குவரத்து நெருக்கடி சாலையின் இரு புறங்களில் வாகன ஓட்டிகள் வாகனத்தை நிறுத்தி வைப்பதால் வாகன நெருக்கடி இருக்கிறது என சமூக ஆர்வலர்களும் பொதுமக்கள் குற்றச்சாட்டு

## வணிகர் நல வாரிய சிறப்பு முகாம்: அமைச்சர் முத்துசாமியிடம் வணிகர் சங்க பேரவை அழைப்பு மனு

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் ஈரோடு மாவட்டத் தலைவர் ஜோசப் தலைமையில், சங்க நிர்வாகிகள் தமிழக அமைச்சர் சு.முத்துசாமி அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை



அளித்தனர்.

அந்த மனுவில், வணிகர்களின் நலன் கருதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வணிகர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கைக்கான கட்டணத்தை முழுமையாக விலக்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளதற்கும், தெருவோர வியாபாரிகள் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர வழிவகை செய்ததற்கும் நன்றியும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு நல வாரியங்களின் கீழ் கிடைக்கும் சலுகைகள் மற்றும் பயன்கள் அனைத்து வியாபாரிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், ஈரோடு மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் ஒரு சிறப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, வருகிற 19-ம் தேதி காலை 10 மணிக்கு, பெருந்துறை கருமாண்டி செல்லிபாளையம் சிறப்பு நிலை பேரூராட்சி வளாகத்தில் இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற உள்ளது.

இந்த முகாமில் நடைபாதை வியாபாரிகள், தள்ளுவண்டி கடைக்காரர்கள், தினசரி மற்றும் வாரச்சந்தை வியாபாரிகள் என அனைத்து தரப்பினரும் நல வாரியங்களில் இணைக்கப்பட உள்ளனர். இந்தச் சிறப்பு நிகழ்வில் அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் நேரில் கலந்து கொண்டு சிறப்பிக்கவேண்டும் என நிர்வாகிகள் அந்த மனுவில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த சந்திப்பின் போது ஈரோடு மாவட்டச் செயலாளர் நித்தியகுமார், மாவட்டத் துணைத் தலைவர் பூங்கொடி மணி, மாவட்டத் தலைமை நிர்வாகச் செயலாளர் சுகன்யா நந்தகுமார் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி மாவட்டம் சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பில்

## விபத்துகளைத்தடுக்க வேகத்தடைகள் அமைக்க வேண்டும் என்று கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்தனர்

தூத்துக்குடி மாநகரின் முக்கிய சந்திப்புகள் மற்றும் நெடுஞ்சாலைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் விபத்துகளைத் தடுக்க வேகத்தடைகள் அமைக்கக் கோரி, சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு



அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தின் எதிரே அமைந்துள்ள அண்ணா சிலை ரவுண்டானாவைச் சுற்றி பாளையங்கோட்டை சாலை, பாலவிநாயகர் கோவில் தெரு, வி.இ. சாலை, பெருமாள்புரம் மற்றும் தேவர்புரம் சாலை ஆகிய ஐந்து முக்கியச் சாலைகள் சந்திக்கின்றன.

இப்பகுதியைச் சுற்றி சுப்பையா வித்யாலயம் (ஆரம்ப மற்றும் மகளிர் பள்ளி), கே.வி.எஸ் ஆங்கிலப்பள்ளி, பாரதியார்வித்யாலயம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள், அரசு மருத்துவமனை, வீரமணி மருத்துவமனை, ஏ.வி.எம் மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகள் காய்கனி மார்க்கெட் மற்றும் ஏராளமான வர்த்தக நிறுவனங்கள் அமைந்துள்ளன. அதேபோல், மாநகராட்சியின் 56-வதுவார்டுக்குஉட்பட்டதூத்துக்குடி-திருச்செந்தூர் நெடுஞ்சாலையில், டாக் நகர் மற்றும் தவசி பெருமாள் சாலைப் பகுதிகளைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள், பேருந்து நிறுத்தங்களுக்குச் செல்ல இச்சாலையைக் கடக்க வேண்டியுள்ளது. அதிவேகமாகச் செல்லும் வாகனங்களால் இப்பகுதியில் அடிக்கடி உயிரிழப்புகளும், விபத்துகளும் ஏற்படுவதாக மனுவில் குறிப்பிடப்பட்டு ள்ளது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பைக் கருதி, அண்ணாசிலை சந்திப்பு பகுதி மற்றும் டாக் நகர், தவசி பெருமாள் சாலை ஆகிய இடங்களுக்கு முன்பாக உடனடியாக வேகத்தடைகள் அமைக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்குச் சமத்துவ மக்கள் கழகத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாநில வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் வக்கீல் சகாயராஜ், மாவட்டச் செயலாளர் மாலைசூடி அற்புதராஜ், மாவட்ட அவைத் தலைவர் கண்டிவேல், மாவட்டத் துணைச் செயலாளர் அருள்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், மாவட்டத் தொண்டர் அணி செயலாளர் முத்துசெல்வம், வர்த்தக அணி செயலாளர் சிவசு முத்துக்குமார், தொழிலாளர் அணிசெயலாளர்சங்கர், 56-வதுவார்டுசெயலாளர் ஜெயகர் மற்றும் முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (16.02.2026) சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக உயர்கல்வித் துறையின் சார்பில் ஈரோடு சிக்கைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குடிமைப்பணி பயிற்சி மையம், நூலகம் மற்றும் விளையாட்டு மைதாளம் ஆகிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பணிகளைதுவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, கல்லூரி முதல்வர் திருகுமரன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.02.2026) காந்திஜி சாலை, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான கோட்ட அளவிலான மறுவாழ்வு சேவை மையத்தில் நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் தலா ரூ.50,000/ நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்க நாணயத்தினை வழங்கினார். உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , ஈரோடு மாநகராட்சி மூன்றாம் மண்டல தலைவர் சசிகுமார்,மாவட்ட சுகாதார அலுவலர் மரு. அருணா உட்பட பலர் உள்ளனர்.

# வடமதுரை அருள்மிகு விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் மஹா சிவராத்திரையையொட்டி வள்ளி கும்மி நடனம்

## 4 காலங்களில் சிறப்பு அலங்கார அபிஷேக தீபாராதனை

மஹா சிவன் ராத்திரியை ஒட்டி அனைத்து சிவாலயங்களிலும் இரவு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் வெகு விமர்சையாக



கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை துடியலூரை அடுத்த வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் மஹா சிவன் ராத்திரையைஒட்டிவிருந்தீஸ்வரருக்கு நான்கு காலங்களில் சிறப்பு அலங்காரா பூஜைகள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றது. இந்த சிறப்பு பூஜைகளில்ஆயிரக்கணக்கான சிவ பக்தர்கள் இரவு முழுவதும் கோவிலில் தங்கி வழிபாடு செய்தனர். தயாநிதி குருக்கள் தலைமையில் சிவனடியார்கள் இறைவனுக்கு அபிசேக, அலங்கார பூஜைகளை செய்தனர்.

மேலும் எஸ் வி எம் கலைக் குழு மற்றும் ஒரு மரத்துப் பறவைகள் கிராமிய கும்மி குழுவினரின் வள்ளி கும்மி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஒரே மாதிரியான உடையணிந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் 60 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு வள்ளி கும்மி நடனமாடி அசத்தினர். இந்நிகழ்ச்சியை விருந்தீஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் பி வி மணி தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். அறங்காவலர் குழு உறுப்பினர்கள் அம்சவேணி பழனிச்சாமி, சாமிநாதன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் இரவு முழுவதும் பக்த்தர்கள் கண் விழித்து இருக்ககோவில் வளாகத்தில் எல் ஈ டி திரை அமைத்து அதில் பக்தி திரைப்படங்களை ஒளிபரப்பினர். இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை ஆர் டி ஓ பழனிசாமி, வேல்முருகன், சேகர், வேலுச்சாமி, ஏ வி எம் வேல்முருகன், சேது, சிவக்குமார் பிரதோச குழுவினர், வெள்ளகிணர் செல்வகுமார், ரவிச்சந்திரன், தணிகைசெல்வன், மோகனசுந்தரம், விஜயகுமார், என். பி.பாபு, ஜெயபால், காளிதாஸ், ராஜ் கண்ணன், சுரேஷ், வெள்ளக்கிணர் சண்முகசுந்தரம் , மனோகரன், விஜ யகுமார், சஷ்டி குழு கலாவதி, உமாதேவி ஆடிட்டர் கிரண்ஸ்ரீ உள்ளிட்டோர் செய்திருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு உள்ள சாலையில் இருந்து நாகர்கோவில் நோக்கி சென்ற சொகுசு கார் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து அச்சாலையில் உள்ள சென்டர்மீடியனில் மோதி விபத்துஇதில் காரின் முன் பகுதி அப்பளம் போல் நொருங்கி பலத்த சேதம்இது சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்புஅதிஷ்டவசமாக ஓட்டுநர் உயிர் தப்பினர்தப்பிய ஓட்டுநர் காரை அங்கு போட்டு விட்டு ஓட்டம்போக்குவரத்து புலனாய்வு போலீசார் விசாரணைமேலும் அச்சாலையில் தொடர்ந்து சென்டர் மீடியனில் கார்கள் மோதி விபத்து ஏற்படுத்துகிறது,குறுகியசாலைஎன்பதால்விபத்துஏற்பட்டதாகதெரியவருகிறது,எனவே உடனடியாக பேராபத்து நடக்கும் முன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை.

# அமைச்சர்களைச் சந்தித்து வாழ்த்துப்பெற்ற விசிக மாவட்டச் செயலாளர் விஜய பாலன்



விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பெருந்துறை மாவட்டச் செயலாளராகப் புதிய பொறுப்பேற்றுள்ள வி.விஜய பாலன், தமிழக அமைச்சர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். பல்வேறு அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்த தமிழக வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களை, விசிக மாவட்டச் செயலாளர் வி.விஜய பாலன் நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து மரியாதை நிமித்தமாக வாழ்த்துப் பெற்றார்.

அதனைத்தொடர்ந்து,பெருந்துறையில்ஒருதிருமண நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த தமிழக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களையும் நேரில் சந்தித்து அவர் தனது வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார். கட்சியின் புதிய பொறுப்பை ஏற்றுள்ள விஜய பாலனுக்கு அமைச்சர்கள் இருவரும் தங்கள் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பின் போது கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் உடனிருந்தனர். மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு அமைச்சர்களைச் சந்தித்து அவர் வாழ்த்துப் பெற்றது அரசியல்வட்டாரத்தில்முக்கியத்துவம்வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# சித்தாமூர் அருகே அதிமுக நிர்வாகி இல்ல படத்திறப்பு விழா



செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் சித்தாமூர் கிழக்கு ஒன்றியத்தை சார்ந்த திருமதி. மஞ்சு சிவக்குமார் (மாவட்ட பிரதிநிதி ) இவருடைய மாமனாரும், செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் அண்ணா தொழிற்சங்க மாவட்ட இணைச் செயலாளர் சூனாம்பேடு சிவக்குமார் B,sc. அவர்களின் தந்தையார் தெய்வத்திரு. G. வையாளி, திருவுருவ படத்திறப்பு விழாவிற்கு செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் ஆற்றல்மிகு மாவட்ட கழக செயலாளர் திருக்கழு குன்றம் எஸ் .ஆறுமுகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றுது

இந்த நிகழ்ச்சியில் பெரும்பாக்கம் E. ராஜசேகர், பரங்கிமலை ஒன்றியகழக செயலாளர்.

Pk. லிங்கேஸ்வரன் ஒன்றிய அவைத்தலைவர் சித்தாமூர்கிழக்கு.கல்பட்டுC.சங்கர்மாவட்டபிரதிநிதி சித்தாமூர் கிழக்கு. வெல்டிங் S.சேகர் மாவட்ட இளைஞர் அணி துணை செயலாளர். P. ரஜினிகாந்த்

மாவட்ட வர்த்தக அணி இணை செயலாளர். திரு E. வேலு ஒன்றியநிர்வாகி.திரு p.செல்வகணபதி ஒன்றிய அமைப்பு சாரா ஓட்டுனர் அணிதலைவர் மற்றும் கிளைகழக செயலாளர்கள் உளிட்ட ஏராளமான கழகத்தின் உடன்பிறப்புகள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார்கள்.

# கைலாசநாதர் கோயிலில் மஹா சிவராத்திரி நாட்டிய விழா



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் பிரணவ மலையில்அமைந்திருக்கும்கைலாசநாதர்கோயிலில் மஹாசிவராத்திரிநாட்டியவிழாவெகுவிமர்சையாக நடைபெற்றது.

கைலாசநாதர் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை இரவு 09:00 மணிமுதல் 10:30 மணி வரை

வளர்கலை நாட்டியாலயாவில் பயிலும் திருப்போரூர், சோத்துப்பாக்கம், மதுராந்தகம் பகுதி மாணவிகள் 28 பேர் நாட்டிய அர்ப்பணம் செய்தனர்.

மேலும் பிரணவ மலையில் திரண்டியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில்

விநாயகர் கவித்துவம், பாரதியார் பாடல் நடனம், நடேஷ கவித்துவம், பச்சை மயில் வாகனனே, ஆண்டாள் கவித்துவம், திரௌபதி நடனம், சின்ன கண்ணன்பதம்,சிவன்சக்திஆடியதாண்டவலாஸ்யம் என அனைவரும் மெய்சிலிர்க்கும் வகையில் பரத நாட்டியம் ஆடினர்.

இந்நிகழ்விற்குவளர்கலைநாட்டியாலயாநிறுவனர் கலை வளர்மணி வனிதா சீனிவாசன் தலைமை தாங்கினார். திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் ஒருங்கிணைப்பு குழு, அர்த்தஜாமம் மற்றும் பள்ளியறை வழிபாட்டு குழு நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். ஆனந்த் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், சிக்கைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நேற்று (16.02.2026) வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டாவினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, கல்லூரி முதல்வர் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (16.02.2026) நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தனி மாவட்ட வருவாய் அலுவலர் த.மஞ்சுளாபொதுமக்களிடமிருந்துகோரிக்கைமனுக்கள்பெற்று,குறைகள்கேட்டறிந்தார்.

# ஏப்ரல் 3ஆம் தேதி புனித வெள்ளியன்று தமிழகம் முழுவதும் மதுக்கடைகளை மூட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன் அந்தோணி கோரிக்கை



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு விடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: கிறிஸ்தவர்களின் மிக முக்கிய நம்பிக்கையான இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நினைவு கூரும் புனித வெள்ளி அன்று, கிறிஸ்தவர்கள் இரத்ததான முகாம்கள் நடத்துதல், சிலுவைப் பாதை ஊர்வலங்கள் மற்றும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த நாளை ஒரு தியாக நாளாகக் கடைபிடிப்பதால், அன்று மதுக்கடைகளை மூட வேண்டியது அவசியமாகும். டெல்லி மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் புனித வெள்ளியன்று ஏற்கனவே மதுக்கடைகள் மூடப்படுகின்றன. அதேபோல் தமிழகத்திலும் மகாவீர்ஜெயந்தி,மிலாடி நபி, வள்ளலார் நினைவு நாள் போன்ற தினங்களில் மதுக்கடைகள் மூடப்படுவதைவரவேற்கும் ஆயர், அந்தப் பட்டியலில் புனித வெள்ளியையும் சேர்க்க வேண்டும்என்று முதலமைச்சருக்குப் பரிந்துரைக்குமாறு ஆட்சியரை கேட்டுக்கொண்டுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளாகவே சிறுபான்மையினர்நலஆணையம் மற்றும் பல்வேறு மதுவிலக்கு இயக்கங்கள் வாயிலாக இந்தத் தொடர் கோரிக்கை தமிழக அரசுக்கு முன்வைக்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக அரசு படிப்படியாக மதுக்கடைகளைக் குறைத்தல் மற்றும் மது போதைக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தல் போன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருவதைப் பாராட்டியுள்ள ஆயர், மக்களின் சமய கலாச்சார விழாக்களின் மாண்பைக் காக்க அரசு முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த மனுவினை தூத்துக்குடி மறைமாவட்ட முதன்மை குரு ஜோசப் ரவிபாலன், தலைமைச் செயலர் சகாய லூரின் மற்றும்மதுவிலக்குசபை இயக்குனர் ஜெயந்தன் டி கிரேஸ் ஆகியோர் ஆட்சியரிடம் அளித்தனர்.

# அமிர்தகடேஸ்வரர் நூதன ஆலய கும்பாபிஷேகம் பணிகளை அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு செய்தார்

தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு திண்டல் அருள்மிகுஸ்ரீ வேலாயுதசுவாமி புனராவர்த்தன ஸ்ரீ அபிராமி அம்பிகை உடனுறை அமிர்தகடேஸ்வரர் நூதன ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா வருகின்ற 22.02.2026 அன்று நடைபெறுவதை முன்னிட்டு நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மாநகராட்சி சார்பில், கோவில் வளாகத்தை சுத்தமாகவும், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, உடனுக்குடன் குப்பைகளை அகற்றிட வேண்டுமெனவும். தொடர்ந்து, மின்சார துறையின் சார்பில் கும்பாபிஷேகம் நடைபெறும் தினத்தன்று தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், நெடுஞ்சாலை துறையின் சார்பில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பக்தர்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் சாலைகளை மேம்படுத்திட வேண்டும். காவல்துறை சார்பில் பக்தர்கள் பாதுகாப்பாகவந்து செல்லும்வகையில்,காவலர்களை கொண்டு கூட்ட நெரிசல் ஏற்படாதவாறு சி.சி.டி.வி. கேமராக்கள் மூலம் கண்காணிக்க வேண்டும். மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மருந்துவர்களுடன் மருத்துவ குழு, தீயணைப்புத்துறையின் சார்பில் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் இருக்கவேண்டும். மேலும், இவ்விழாவினை எவ்வித இடர் பாடு இல்லாமல் விழாவினை சிறப்பாக நடத்திட அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சிகளின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர்கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி ஆணையர்அர்பித்ஜெயின் , ஈரோடு வருவாய் கோட்டாட்சியர்சிந்துஜா,இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) உதவி ஆணையர்சுகுமார்,திண்டல் முருகன் கோவில் செயல் அலுவலர் ஜீவலட்சுமி, கோவில் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் உடன் இருந்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.